**செம்பாக்கம் நகராட்சியில் 11.1.2021ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ராஜகீழ்பாக்கம் கிராமம் நில அளவை எண்.13/1எ1எ பார்ட், 1எ1பி பார்ட், 13/1எ1டிபார்ட், 12/1எ1ஈ பார்ட், 13/1எ1எப் பார்ட் மற்றும் 12/5 பார்ட் அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு சிறப்பு கட்டிட திட்ட அனுமதி பெற்ற வகையில் (1036.36+100.18) மொத்தம் 1136.54 ச.மீ திறந்த வெளி நிலம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தினை நில உரிமையாளர் தான பத்திரம் மூலம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு தான பத்திரம் எண்.5950/2012 நாள் 13.8.2012ன் படி பத்திர பதிவு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | கிராமம் | திறந்த வெளி இடம் | நில அளவை எண் | புற எல்லைகள் | விஸ்தீரணம் (ச.மீல்) |
|---|---|---|---|---|---|
| 1 | ராஜகீழ்பாக்கம் | 1 | 13/1எ1எ பார்ட், 1எ1பி பார்ட், 13/1எ1டிபார்ட், 12/1எ1ஈ பார்ட், 13/1எ1எப் பார்ட் மற்றும் 12/5 பார்ட் | வடக்கு: தாம்பரம் வேளச்சேரி மெயின் ரோடு | 1036.36 |
| | | | | கிழக்கு: ச.எண்.13/1எ1எபார்ட், 131/1எ1டி பாாரட், 13/1எ1ஈ பார்ட், 13/1எ1எப் பார்ட் | |
| | | | | தெற்கு: ச.எண்.13/1எ1எப் | |
| | | | | மேற்கு: ச.எண்.13/1எ1சி | |
| 2 | ராஜகீழ்பாக்கம் | 2 | 13/1எ1எ பார்ட், 1எ1பி பார்ட், 13/1எ1டிபார்ட், 12/1எ1ஈ பார்ட், 13/1எ1எப் பார்ட் மற்றும் 12/5 பார்ட் | வடக்கு: ச.எண்.12/5 பார்ட் | 100.18 |
| | | | | கிழக்கு: ச.எண்.12/3எ1பி | |
| | | | | தெற்கு: உத்தேச சாலை | |
| | | | | மேற்கு: ச.எண்.18 | |
| | | | | மொத்தம் | 1136.54 |

மேற்படி திறந்த வெளி இடத்தினை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் கடிதம் எண்.5910/2012 நாள் 18.8.2012ல் இந்நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அடுக்குமாடி கட்டிடம் பணி முடிவடைந்து, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் மூலம் பணி முடிவு சான்று எண்.EC/SOUTH-II/110/2020 DT: 15.7.2020ல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சி வசம் உள்ள திறந்தவெளி இடத்தில் அகிலா ஹைட்ஸ் அடுக்குமாடி உரிமையாளர்களின் நலச்சங்கம் தனது சொந்த செலவில் பசுமை பகுதியாகவும், விளையாடும் இடமாகவும் சொந்த செலவில் பராமரித்து கொள்ள அனுமதி வழங்க கோரி 8.1.2021 தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளனர்.

எனவே, திறந்த வெளி இடத்தில் அகிலா ஹைட்ஸ் அடுக்குமாடி உரிமையாளர்களின் நலச்சங்கம் மூலம் பசுமை பகுதியாகவும், விளையாடும் இடமாகவும் பராமரித்துக் கொள்வதற்கு

கீழ்காணும் நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி அளிப்பது தொடர்பாக மன்றத்தின் பரிசீலணைக்கும், முடிவிற்கும்.

**நிபந்தனைகள்**

1. ஒப்படைப்பு செய்யப்படுகிற திறந்த வெளி இடத்தில் அகிலா ஹைட்ஸ் அடுக்குமாடி உரிமையாளர்களின் நலச்சங்கம் மூலம் பசுமை பகுதியாகவும், விளையாடும் இடமாக மட்டுமே பராமரிக்கப்பட வேண்டும். கட்டிடங்கள் ஏதும் ஏற்படுத்த கூடாது.
2. எதிர் காலத்தில் அவ்விடம் நகராட்சிக்கு தேவைப்படும் எனில் எவ்வித முன்அறிவிப்பு ஏதுமின்றி திரும்ப பெற்றுக் கொள்ள நகராட்சிக்கு முழு அதிகாரம் உண்டு.
3. இவ்விடத்தினை அடுக்குமாடி குடியிருப்போர் மட்டும் அல்லாமல் இதர பொது மக்கள் பயன்பெறும் வகையில் பொது வழிப்பாதை அமைத்து பராமரித்திட வேண்டும்.
4. ஒப்படைப்பு செய்யப்படுகிற திறந்த வெளி இடத்திற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைத்து இவ்விடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் என அறிவிப்பு பலகை நிறுவ வேண்டும்.
5. இதர பொது நிபந்தனைகளுக்குட்பட்டது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்ட திறந்த வெளி இடத்தினை அகிலா ஹைட்ஸ் அடுக்குமாடி உரிமையாளர்களின் நலச்சங்கம் மூலம் பராமரிப்பதற்கு நிபந்தனைகளுடன் ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.746** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 02.09.2020ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்2 நாள் 29.09.2020ல் தெரிவித்துள்ளவாறு கொரோனா நோய் தொற்று (Covid 19) தடுப்பு பணி காரணமாக மத்திய / மாநில அரசினால் பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் (01.04.2020 முதல் 31.05.2020 வரை) உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகளுக்கான மற்றும் குத்தகை இனங்களுக்கான மாதாந்திர வாடகை / குத்தகை தொயைினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகளின் வாடகை / குத்தகை தொகையினை 01.04.2020 முதல் 31.05.2020 வரையான இரண்டு மாதங்களுக்கான கேட்பு தொகையினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

| Sl.No | Assessment No | Assessee Name | Shop No. | April 2020 Demand | May 2020 Demand | Total Demand to be waived in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 (5+6) |
| | **Gowrivakkam Shopping Complex** | | | | | |
| 1 | 001/000001 | PANDY MEENAL | Shop No.1 | 4203 | 4203 | 8406 |
| 2 | 001/000002 | SIVASANKAR | Shop No.2 | 4375 | 4375 | 8750 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 001/000003 | KARUNAKARAN | Shop No.3 | 4375 | 4375 | 8750 |
| 4 | 001/000004 | SOUNDAR | Shop No.4 | 4192 | 4192 | 8384 |
| 5 | 001/000005 | SOUNDAR | Shop No.5 | 4192 | 4192 | 8384 |
| 6 | 001/000006 | MURALIKRISHNAN | Shop No.6 | 4377 | 4377 | 8754 |
| 7 | 001/000007 | P.V.MOHAN | Shop No.7 | 4377 | 4377 | 8754 |
| 8 | 001/000008 | KRISHNAVENI | Shop No.8 | 4377 | 4377 | 8754 |
| 9 | 001/000010 | V.SELVAM | Shop No.11 | 1359 | 1359 | 2718 |
| 10 | 001/BD01/00004 | K. AMBIGAIBALAN | Shop No.15 | 4200 | 4200 | 8400 |
| 11 | 001/000015 | SUNDARAMOORTHY | Shop No.16 | 3891 | 3891 | 7782 |
| 12 | 001/BD01/00005 | N. NESAMANOHAR | Shop No.17 | 4305 | 4305 | 8610 |
| 13 | 001/BD01/00008 | SUB POST OFFICE GOWRIVAKKAM | Shop No.21 | 7875 | 7875 | 15750 |
| | **Kamarajapuram Shopping Complex** | | | | | |
| 14 | 001/000021 | M.KRISHNAN | Shop No.2 | 10036 | 10036 | 20072 |
| 15 | 001/000022 | L.SUNDARRAJAN | Shop No.3 | 9202 | 9202 | 18404 |
| 16 | 001/000023 | SIVASANKARAN | Shop No.4 | 11402 | 11402 | 22804 |
| 17 | 001/000024 | A. HABEEB ALI | Shop No.5 | 6276 | 6276 | 12552 |
| 18 | 001/000025 | SANTHANAKUMAR | Shop No.6 | 9893 | 9893 | 19786 |
| 19 | 001/000026 | UDAYAKUMAR | Shop No.7 | 8856 | 8856 | 17712 |
| 20 | 001/000027 | KUMAR | Shop No.8 | 7524 | 7524 | 15048 |
| 21 | 001/000028 | S.A.VIJAYARAGHAVAN | Shop No.9 | 7524 | 7524 | 15048 |
| 22 | 001/000029 | N.MUTHUSAMY | Shop No.10 | 3033 | 3033 | 6066 |
| 23 | 001/000030 | M.NARASIMAN | Shop No.11 | 2948 | 2948 | 5896 |
| 24 | 001/BD01/00001 | K. MALATHI | Shop No.12 | 5775 | 5775 | 11550 |
| 25 | 001/000032 | S.RAJAN | Shop No.13 | 3188 | 3188 | 6376 |
| 26 | 001/000033 | SENTHILKUMAR | Shop No.14 | 5845 | 5845 | 11690 |
| 27 | 001/000034 | EDVINA | Shop No.15 | 5845 | 5845 | 11690 |
| 28 | 001/000035 | SANTHASIVAM | Shop No.16 | 2948 | 2948 | 5896 |
| 29 | 001/000036 | P.SATHISKUMAR | Shop No.17 | 2948 | 2948 | 5896 |
| 30 | 001/000037 | JESURAJAN | Shop No.18 | 5845 | 5845 | 11690 |
| | **Maruthi Nagar Shopping Complex** | | | | | |
| 31 | 001/000038 | C. MOHAMMED HASHIM | Shop No.1 | 2956 | 2956 | 5912 |
| 32 | 001/000039 | S.KATHIRAVAN | Shop No.2 | 2808 | 2808 | 5616 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 33 | 001/BD01/000 07 | M. RAJA | Shop No.3 | 4305 | 4305 | 8610 |
| 34 | 001/000041 | R.KISHOREKUMAR | Shop No.4 | 2660 | 2660 | 5320 |
| 35 | 001/000042 | S.KAJENDRABABU | Shop No.5 | 2660 | 2660 | 5320 |
| 36 | 001/000043 | K.DAYALAN | Shop No.6 | 2589 | 2589 | 5178 |
| 37 | 001/000044 | K.BHARATHI | Shop No.7 | 2511 | 2511 | 5022 |
| 38 | 001/BD01/000 06 | M. SEBSTIN | Shop No.8 | 4305 | 4305 | 8610 |
| 39 | 001/000046 | V.FARVEEN CHAKARAPANI | Shop No.9 | 2407 | 2407 | 4814 |
| 40 | 001/000047 | S.KAJENDRABABU | Shop No.10 | 2364 | 2364 | 4728 |
| | | | Total | **194751** | **194751** | **389502** |

அலுவலக குறிப்பு:

1. அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 02.09.2020 பார்வைக்கும், பதிவிற்கும்.
2. கேட்பு தொகையினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.747 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளில் 50% மக்கும் கழிவுகள் 50% மக்காத கழிவுகள் என மொத்தம் 24 மெட்ரிக் டன் குப்பைகள் அன்றாடம் உருவாகிறது. இதில் மக்கும் கழிவுகள் 12 மெட்ரிக் டன் தினமும் MCC/OCC/BWG என நகராட்சி பகுதிக்குள்ளேயே உரமாக்கி அதை விவசாயிகள், பொதுமக்கள், தோட்டக்கலைத்துறை, வனத்துறை என அனைவருக்கும் இயற்கை உரம், இலவசமாகவும், விற்பனை செய்தும் அதில் வரும் தொகையை துப்புரவுப் பணியார்களுக்கே பிரித்து வழங்கப்பட்டு 100 % மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதியிலேயே அன்றாடம் கையாளப்பட்டு வருகிறது. மேலும், மக்காத, மறு சுழற்சி குப்பைகள், விற்பனைக்கு கடந்த உலர் கழிவுகளை உள்ளூர் காயிலாங் கடைக்காரர்களிடம் நாளொன்றுக்கு 2 டன் வீதம் வாரம் 12 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை வாரம் ஒரு நாள் விற்பனை செய்து அதையும் துப்புரவு பணியாளர்களுக்கே பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இட வசதி ஏதும் இல்லாத காரணத்தினால், விற்பனைக்கு அல்லாத மறு சுழற்சிக்கு பயன்படாத, மறு பயன்பாட்டிற்கு உட்படுத்த இயலாத 12 வகையான எரியூட்டக் கூடிய கழிவுகளான பிளாஸ்டிக் பொருட்கள், மரங்கள், ரப்பர்கள், டயர்கள், ஷோபாக்கள், மெத்தைகள், தலையணைகள், கிழிந்த துணிகள், கந்தல்கள், தேங்காய் மட்டைகள், Soiled Plastic மற்றும் Lining Materials சேகரித்து சென்னை பெருநகர மாநகராட்சி அவர்களின் அனுமதியின் படி மூன்று மாத காலத்திற்கு அனுமதி வழங்கியதை தொடர்ந்து 23.9.2020 முதல் 31.12.2020 வரை கொடுங்கையூர் உரக்கிடங்கில் இந்நகராட்சியின் தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி அனுமதி காலம் 31.12.2020 உடன் முடிவடைய உள்ள நிலையில் தற்போது வரை தேசிய பசுமை தீர்ப்பாயம் வேங்கடமங்கலம் உரக்கிடங்கின் மீதான தடை தொடர்வதாலும், செம்பாக்கம் நகராட்சியில் சேகரமாகும் மக்காத குப்பைகளை கொடுங்கையூரில் கொட்டுவதற்கு அனுமதியினை நீட்டித்து வழங்கிட கோரப்பட்டது.

சென்னை பெருநகர மாநகராட்சியின் மூலம் அனுமதி வழங்கப்படாத நிலையில், இந்நகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 10 முதல் 12 டன் வரை உலர் கழிவுகளை வேறு எங்கும் எடுத்து சென்று சேர்ப்பதற்கு வழிவகை இல்லாததால் பொது சுகாதார நலன் கருதி மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், ஒரு முறை 7 முதல் 10 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கொண்டு செல்வதற்கு ரூ.12000/– வீதம் (டிப்பர் லாரி வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) கணக்கீடு செய்து, அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து தேவைக்கேற்ப விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின தொகையாக ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்த வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அங்கீகாரத்திற்கு.

**தீர்மான எண்.748** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**தனி அலுவலர்**
**செம்பாக்கம் நகராட்சி**